**தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியம் - 2019**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரித்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 47ஆம் இலக்க இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 61ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட 1994 இன் 1 ஆம் இலக்க தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியக் கட்டளைகள் கோவையின் 12ஆம் இலக்க கட்டளையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.
இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சங்கத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சங்கத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சங்கத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை

தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சங்கத்தின் கட்டுப்பாட்டுச் சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1999 யூன் 17ஆந் திகதிய நிதி மற்றும் கொள்கைத் திட்டமிடல் அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள தேசிய திரைப்படக் கொள்கை மறறும் அது தொடர்பான | முதலீட்டுச் சபையின் பிரமாணங்களின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட திரையரங்குகளிலும் காட்சிப்படுத்தப்பட்ட ஒவ்வொரு இறக்குமதி செய்யப்பட்ட திரைப்படத்தினதும் நுழைவுச் சீட்டுகளிலும் ரூபா 2.25 அல்லது | ஆரம்பத்தில் இந்த திரையரங்கம் திரைப்பட வாடகை மற்றும் வருமானப் பங்கினை செலுத்தியிருந்ததுடன், தற்போது நாளாந்த அறிக்கைகளையேனும் கூட்டுத்தாபனத்திற்கு சமர்ப்பிப்பதில்லை. | திரைப்பட கொள்கை மற்றும் அது தொடர்பிலான வழிகாட்டிக் கோவையின் 6.5ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வழிகாட்டிக் கோவையின் 6.5ஆம் பிரிவு | மொத்த நுழைவுச் சீட்டு வருமானத்தின் 2.25 சதவீதம் அகிய இரண்டில் கூடிய தொகை நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய போதிலும், 2001ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட மருதானை சினி சிட்டி (Cine City) திரையரங்கிலிருந்து அநவிடப்பட வேண்டிய பணத்தை கணிப்பிட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 1996 ஒக்தோபர் 24ஆந் திகதிய 9/946ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1996 இள் 01ஆம் இலக்க இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன (நானாவித கட்டணங்கள்) கட்டளை | | | |
| | (i) 4 ஆம் பிரிவு | இறக்குமதி செய்யப்பட்ட திரைப்படமொன்றினை காட்சிப்படுத்தும் சந்தர்ப்பத்தில் அறவிடப்படும் கட்டணங்களுக்கு (Levy) இற்கு மேலதிகமாக ‘‘யு’’ தொகுதியிலான திரைப்படமொன்றிற்காக நுழைவுச்சீட்டொன்றில் ஒரு ரூபாயும், ‘‘எக்ஸ்’’ தொகுதியின் மற்றும் ‘‘வயது வந்தோருக்கு மாத்திரம் பொருத்தமான’’ எனும் தொகுதிகளுக்கு உரிய திரைப்படங்களுக்காக நுழைவுச்சீட்டொன்றில் மூன்று ரூபாயும் அறவிடப்பட வேண்டும். அந்த பணம் திரையரங்கின் உரிமையாளர் அல்லது | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் (நானாவித கட்டணங்கள்) கட்டளையின் பிரகாரம் மேலதிக கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | குத்தகையாளரினால் நிதியத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும், பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | 2(4)(i)(உ) பிரிவு | திரைப்படங்களின் உயர் தரத்தினை உறுதிசெய்வதற்காக திரைப்படங்களை தயாரிப்பதற்கு மற்றும் காட்சிப்படுத்துவதற்கு தேவையான உபகரணங்களை விநியோகிப்பதற்கு சுமார் 09 வருட காலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதுரையிலும் நியமிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டுச் சபையுடன் எதிர்காலத்தில் இந்த பணிகளை நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. | திரைப்படங்களின் தரங்களை மேம்படுத்துவதற்காக திரைப்படங்களை தயாரிப்பதற்கு மற்றும் காட்சிப்படுத்துவதற்கு தேவையான உபகரணங்களை விநியோகிக்க வேண்டியமை. |
| (iii) | 2(4)(i)(ஊ) பிரிவு | திரைப்படத் துறையிலுள்ள கலைஞர்களுக்கு மற்றும் தொழில்நுட்ப வினைஞர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்குதல் அல்லது பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்வதனை நோக்காக் கொண்டு நிதியம் செயற்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | கலைஞர்களுக்கு மற்றும் தொழில்நுட்ப வினைஞர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்குதல் அல்லது பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (iv) | 2(4)(i)(எ) பிரிவு | உயர் தரத்திலான கலைநயமிக்க திரைப்படங்களை முழுமையாக உற்பத்தி செய்வதற்காக திரைக்கதை மதிப்பீட்டு குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட திரைக்கதைகள் அல்லது அவ்வாறான திரைப்படங்களை தயாரிக்கும் பணிக்காக பெற்றுக்கொள்ளக்கூடிய மூலமொன்றிலிருந்து விசேட உபகரணங்களை வாடகைக்கு பெற்றுக்கொள்ளும் பொருட்டு பணிப்பாளர்களுக்கு கடன் | -மேற்படி- | உயர் தரத்திலான கலைநயமிக்க திரைப்படங்களை அல்லது திரைக்கதை மதிப்பீட்டு குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட திரைப்படங்களை தயாரிக்கும் பணிக்காக பெற்றுக்கொள்ளக்கூடிய மூலமொன்றிலிருந்து விசேட உபகரணங்களை வாடகைக்கு பெற்றுக்கொள்ள பணம் வழங்கிஅ |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வழங்குதல் மூலம் திரைப்படத் தயாரிப்பினை மேம்படுத்துவதற்காக பல வருடங்களாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | வ்வாறான உற்பத்திகளை மேம்படுத்த வேண்டும். |
| (v) | 2(4)(i)(ஏ) பிரிவு | 05 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலமாக உள்நாட்டு திரைப்படத் துறையில் ஈடுபட்டுள்ள மற்றும் ஆகக் குறைந்தது பத்து திரைப்படங்களில் பணிகளை பூர்த்தி செய்துள்ள தொழில்சார் வினைஞர்களுக்கு தமது தமது ஆற்றல்களை அதிகரிப்பதற்கு மற்றும் அபிவிருத்தி செய்வதற்கு கடன் தொகை வழங்குவதற்கு 2013ஆம் ஆண்டு தொடக்கம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | 5 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட தொழில்நுட்பவியலாளர்களுக்கு தமது தமது ஆற்றல்களை அதிகரிப்பதற்கு மற்றும் அபிவிருத்தி செய்வதற்கு கடன் வழங்கப்பட வேண்டியமை. |
| (vi) | 6(இ) பிரிவு | கடன் தொகையை மீள செலுத்துதல் தாமதமாகும் எனின், அதற்காக அறவிடப்பட வேண்டிய மிகைக் கட்டணங்கள் கட்டுப்பாட்டுச் சபையினால் நிர்ணயிக்கப்பட்டு அறவிடப்பட வேண்டிய போதிலும், 2013ஆம் ஆண்டு முதல் மீளயர்வாண்டு வரையழலும் திரையரங்குகளின் உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 71,951,386ஆன கடன் தொகை தொடர்பில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் தொகையை மீள செலுத்தல் தாமதமாகும் எனின் அறவிடப்பட வேண்டிய மிகைக் கட்டணங்களை நிர்ணயித்து அறவிட வேண்டியமை. |
| (இ) | 2015 ஒக்தோபர் 23ஆந் திகதிய 3/2015ஆம் இலக்க திறைசேரி செயற்பாட்டு | 2013ஆம் ஆண்டு மக்கள் வங்கியில் ஆரம்பிக்கப்பட்டிருந்த நடைமுறைக் கணக்கில் 2019 திசெம்பர் 31ஆந் திகதியளவில் ரூபா | இதுவரையிலும் செயலற்றிருக்கும் கணக்கினை கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரத்துடன் மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அபிவிருத்தி நிதியத்திலிருந்து செலுத்துவதற்காக பிரதான நடைமுறைக் கணக்கினை பேணி, |

| | | |
|---|---|---|
| சுற்றறிக்கை | 22,643ஆன மீதியொன்று காணப்பட்டதுடன், இந்த செயலற்ற நடைமுறைக் கணக்கினை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயலற்ற நடைமுறைக் கணக்கினை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டின் நிதிப் பெறுபேறு ரூபா 9,789,214 ஆன மிகையாக இருந்ததுடன் அதனோடொத்த கடந்த வருடத்தின் மிகை 11,720,551 ஆகும். அதன் பிரகாரம் நிதிப்பெறுபேறுகளில் ரூபா 1,931,337 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு வெளிநாட்டு திரைப்படங்களின் படப்பிடிப்பிற்கான அங்கீகாரக் கட்டண வருமானம் ரூபா 1,500,000 இனால் மற்றும் வெளிநாட்டு திரைப்பட தொழில்நுட்பவியலாளர்களிடமிருந்தான பெறுவனவுகள் ரூபா 992,000 இனால் குறைவடைந்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. தொழிற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் இறுதியளவில் 5 முதல் 25 வருடங்கள் வரையான காலவீச்சில் முன்கொண்டுவரப்பட்ட ரூபா 67,001,194ஆன கடன் பட்டோர் மீதியில் அறவிடப்படாதுள்ள கடனாக இனங்காணப்பட்டுள்ளதுடன், அந்த கடன் மீதி தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதன் சில கடன்கள் தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், நியமத்திற்குட்பட்டமையால் அதனை செய்யவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் மேலதிக நடவடிக்கைகள் கட்டுப்பாட்டுச் சபையின் வழிகாட்டலுடன் மேற்கொள்ளப்படும். | இந்த கடன் மீதிகளை அறவிடுதல் தாடர்பில் பொருத்தமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும். |
| (ஆ) நிதியத்தின் பிரதான வருமான மூலமான திரைப்பட வாடகை பங்கிப்பினை இலங்கை திரைப்படக் | கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமை நலிவடைந்தமையால் இந்த பணத்தை அபிவிருத்தி | திரைப்பட வாடகைப் பங்களிப்பினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | கூட்டுத்தாபனத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய போதிலும், 2003 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையிலும் இந்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2019 திசெம்பர் 31ஆந் திகதியளவில் இறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 26,561,790 ஆகும். | நிதியத்திற்க வழங்க முடியாதிருந்தது. நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு திரையரங்குகளின் உரிமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது டன், எதிர்காலத்தில் இந்த பணத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) | 2001 மற்றும் 2002ஆம் ஆண்டுகளில் பிலிம் லங்கா எனும் கம்பனிக்கு மருதானை சினிசிட்டி திரையரங்க கட்டிடத் தொகுதியின் நிர்மாணப் பணிகள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 8.5 மில்லியன் கடன் தொகை, உடன்படிக்கையின் பிரகாரம் அறவிடுவதற்கு தவறியிருந்தது. மேலும், 2019 திசெம்பர் 31ஆந் திகதியளவில் ொதடர்ந்தும் ரூபா 890,655 தொகை அறவிடப்பட வேண்டியதாக இருந்தது. இந்த கடன் தொகைக்காக 2006 ஆம் ஆண்டு வரையிலும் பெற்றுக்கொள்ள வேண்டியவட்டியின் பெறுமதி ரூபா 4,064,958 ஆக கணிப்பிடப்பட்டிருந்ததுடன், அதற்கடுத்த ஆண்டிற்காக பெற வேண்டிய கடன் வட்டியை இனங்காணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | உடன்படிக்கையின் பிரகாரம் கடன் தொகை செலுத்தப்படாமையால் வட்டியை கணிப்பிட்டதன் பின்னர் கிடைக்காத வருமானத்தினை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கின்றமையால் 2006ஆம் ஆண்டு வரையான வட்டி மாத்திரம் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | சினிசிட்டி திரையரங்க கட்டிடத் தொகுதியினை நிர்மாணிப்பதற்குரிய கடன் உடன்படிக்கையியன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டு வரையான வட்டியை அறவிடுவதற்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (ஈ) | வேகந்த வலவ்வ திரைப்படத்தின் தயாரிப்பு பணிகளுக்காக வழங்கப்பட்டிருந்த கடன் தொகை மற்றும் அதற்கரிய வட்டி 2019 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 3,525,795 ஆக காணப்பட்டதுடன், அந்த திரைப்படத்தின் உரித்து திரைப்படக் | இந்த திரைப்படத்திற்க உரியதாக தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம், திரைப்பட அபிவிருத்தி நிதியம் மற்றும் நெப்றொபேன் பிக்சர்ஸ் (தனியார்) கம்பனி எனும் 03 தரப்பினர் தொடர்பில் உடன்டிக்கை | திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் அபிவிருத்தி நிதியத்திற்க சொந்தமான திரைப்படங்களை இலத்திரனியல் ஊடகங்களில் காட்சிப்படுத்தும் போது காட்சிப்படுத்தல் வாடகை வருமானம் அபிவிருத்தி |

| | | |
|---|---|---|
| கூட்டுத்தாபனத்திற்க உரிய போதிலும், அவ்வப்போது இந்த திரைப்படம் தொலைகாட்சிகளில் ஒளிபரப்பப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், அந்த திரையிடல் வருமானம் நிதியத்திற்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கைச்சாத்தடப்பட்டிருந்தமையால் தொலைக்காட்சி காட்சிப்படுத்தல் உரித்து தொடர்பில் சட்டரீதியான நிலைமையை தெளிவுபடுத்திக்கொள்வதற்கு தற்போது சட்டப் பிரிவிற்க அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | நிதியத்திற்கு பெற்றுக்கொள்ளப்பட வேண்டியமை. |

### 3.2 நிதியங்களின் குறைப்பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதியத்திற்கு செந்தமான வங்கி நடைமுமறக் கணக்கில் 2019ஆம் ஆண்டின் சராசரி மாதாந்த மீதியானது ரூபா 9.4 மில்லியனாக காணப்பட்டதுடன், அந்த பணத்தை ஆக்கபூர்வமானதாக குறுங்கால முதலீடுகளில் ஈடுபடுத்தி மேலதிகமாக வருமானமொன்றினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் மிகவும் ஆக்கபூர்வமான முறையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கும், நோக்கங்களை அடைந்துகொள்ளல் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கம் எதிர்பார்க்கப்படுகின்றது. | இந்த நிதியத்தில் அன்றாடம் தேவைப்படும் தொழிற்பாட்டு மூலதன்த்திற்கு உரிய பணத்தை நிறுத்தி வைத்து எஞ்சிய தொகையை குறுங்கால முதலீடுகளில் ஈடுபடுத்த வேண்டியமை. |